पोन्. राधाकृष्णन्
பொன். இராதாகிருஷ்ணன்
Pon. Radhakrishnan

राज्य मंत्री
सड़क परिवहन, राजमार्ग एवं
पोत परिवहन मंत्रालय
भारत सरकार
MINISTER OF STATE
FOR
ROAD TRANSPORT, HIGHWAYS AND
SHIPPING
GOVERNMENT OF INDIA

24.12.2014

## இயக்குனர்சிகரத்தின்இணையடிக்குஅஞ்சலி

கதாநாயகர்களின் நடிப்பு, பாடல்திறன், நடிப்பு, வசனம் உச்சரிப்பு போன்றவற்றை நம்பித் திரைப்படங்களோடிய காலம் உண்டு .அக்காலத்தில் நாடகத்திலோ, திரைப்படத்திலோ சற்றும் அறிமுகமில்லாத புதுமுகநடிகர் நடிகைகள், இசை அமைப்பாளர் போன்றவர்களை திரைப்படத்துறையில் அறிமுகம் செய்து, தன் அறிவுத்திறத்தால் திரைப்படங்களை துல்லியமாய் இயக்கி புதிய பரிணாமத்தை தமிழ் திரையுலகிற்கு தந்து, இயக்குனரின் திறமைக்காகவும் திரைப்படங்களை காணச் செய்ய முடியும் என்று முத்திரை பதித்துக்காட்டியவர் **திரு.கே.பாலச்சந்தர்** அவர்கள். அவர் திரைப்படத்துறையில் நுழைந்த போது நீண்ட வசனங்களுக்கிருந்த மரியாதையை மாற்றி நறுக்குத்தெறித்தாற்போல வசனங்களை மக்கள் ரசிக்கும்படி இயக்கிக்காட்டினார்.

தேர்ந்த நகைச்சுவை நடிகரான நாகேஷ் போன்றவர்களை கதாநாயகர் நிலைக்கு உயர்த்தி குணச்சித்திரப்பாத்திரங்களிலும் நடிக்கவைத்து, ரசிககண்களை நனைக்கவைத்த பெருமை திரு.பாலச்சந்தர் அவர்களையேசாரும் .குழந்தை நட்சத்திரமாய் ஜொலித்து இடைப்பட்டகாலத்தில் வெள்ளித்திரையிலிருந்து ஒதுங்கியிருந்த திரு.கமலஹாசன்அவர்களை நடிப்புத்துறையில் நாயகனாக மாற்றியவரும் **திரு.பாலச்சந்தர்அவர்களே**. இன்றைய சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த்அவர்கள் உலகிற்குநடிகராக அறிமுகமானதும், அகில இந்திய அளவில் புகழ்பெற்ற பலகதாநாயகிகளை உருவாக்கிக்காட்டிய பெருமை திரு.பாலச்சந்தர் அவர்களைச்சேரும். மிகக்குறுகிய செலவில் திரைப்படங்களைத் தயாரித்து, இயக்கி, வெற்றியின் சிகரத்தை ஒவ்வொரு முறையும் பெற்று இயக்குனர் சிகரமாக **உயர்ந்ததிரு.பாலச்சந்தர்** அவர்கள்மறைவு, திரைப்படத்துறைக்கு மட்டுமல்லாமல் தமிழகத்தின் அனைத்து மக்களுக்கும் மாபெரும் இழப்பாக அமைந்துள்ளது. **திரு.பாலச்சந்தர்** மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், கலை உலகச்சொந்தங்களுக்கும், ரசிகப்பெருமக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது ஆன்மா நற்கதியடையப்இறைவனை பிரார்த்திக்கிறேன்.

என்றும் தாயகப்பணியில்

(பொன். இராதாகிருஷ்ணன்)

कमरा नं. 310, परिवहन भवन, नई दिल्ली–110001 फोन : 23715159, 23731522 फैक्स : 23718568
Room No. 310, Transport Bhawan, New Delhi-110001, Tel. : 23715159, 23731522 Fax : 23718568